# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 453/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW1 | Caste | : |
| Name | : சேகர் | Calling | : |
| Father / Husband Name | : ராஜு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 21st July 2025.

---

**(எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை காலேஜ் ரோட்டில் எனது சொந்த வீட்டில் வசித்து வருகிறேன். நான் கால்நடைத் துறை இயக்குநர் அலுவலகம் சென்னையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று வீட்டில் வசித்து வருகிறேன். என் மனைவி முத்துவேலு என்பவர் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்று என்னுடனேயே வசித்து வருகிறார். கடந்த 26.02.2020 ம் தேதி காலை 09.00 – 10.00 மணியளவில் என் வீட்டின் காம்பவுண்ட் உள்ளே மரத்துக் குப்பைகளை வேலையாட்களை வைத்து சுத்தம் செய்து எரித்துக்கொண்டிருந்தேன்.

2) அப்போது எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் மேல்மாடியில் குடியிருந்த தாமரை மகன் எழிலரசன் மற்றும் வளர்மதி ஆகியோர் என் வீட்டு கேட்டைத் திறந்து அத்துமீறி என் வீட்டிற்கு உள்ளே வந்து இருவரும் என்னைப் பார்த்து ஏன்டா தேவிடியா மகனே என்றும் குப்பை எல்லாம் எப்படி எரிப்ப என்று சொல்லி வளர்மதி தன் கையில் வைத்திருந்த அரிவாளால் என் தலையில் வெட்டினார். எதிரி எழிலரசன் கம்பை வைத்து என்னை அடித்தார்.

3) அதைப் பார்த்த என் மனைவி நான் ரத்த வெள்ளத்தில் இருப்பதைப் பார்த்து என் அருகே ஓடிவந்தார். அப்போது எழிலரசன் என் மனைவியையும் கீழே தள்ளிவிட்டு உங்கள் இருவரையும் கொன்றால் தான் இந்த இடத்தில் குடியிருக்க முடியும் என அரிவாளைக் காட்டி மிரட்டினார்கள். என் சட்டைப் பையில் இருந்த செல்போனையும், என் வீட்டையும் சேதப்படுத்திவிட்டார்கள். அதன் பிறகு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு என்னை எனது மனைவி சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார். என்னை தாக்கிய நபர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

4) நான் மருத்துவமனையில் இருந்தபோது சிவகங்கை நகர் சார்பு ஆய்வாளர் அங்கு வந்து என்னை விசாரித்தபோது நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி சம்பவத்தில் எதிரிகளால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாக சுமார் 23 நாள்கள் சிகிச்சையில் இருந்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பு அளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

P SELVAM

Digitally signed by P SELVAM
Date: 2025.07.21 17:21:43 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 453/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 2 | Caste | : |
| Name | : முத்துவேலு | Calling | : |
| Father / Husband Name | : சேகர் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 21st July 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை காலேஜ் ரோட்டில் எங்களது சொந்த வீட்டில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். அவர் கால்நடைத் துறை இயக்குநர் அலுவலகம் சென்னையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று வீட்டில் வசித்து வருகிறார். நான் மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்று அ.சா.1 வுடன் வசித்து வருகிறேன். கடந்த 26.02.2020 ம் தேதி காலை 09.30 – 10.30 மணியளவில் எங்கள் வீட்டின் காம்பவுண்ட் உள்ளே மரத்துக் குப்பைகளை வேலையாட்களை வைத்து என் கணவரான அ.சா.1 சுத்தம் செய்து எரித்துக்கொண்டிருந்தார்.

2) அப்போது எங்களது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் மேல்மாடியில் குடியிருந்த தாமரை மகன் எழிலரசன் மற்றும் வளர்மதி ஆகியோர் என் வீட்டு

கேட்டைத் திறந்து அத்துமீறி என் வீட்டிற்கு உள்ளே வந்து இருவரும் என்னைப் பார்த்து ஏன்டா தேவிடியா மகனே என்றும் குப்பை எல்லாம் எப்படி எரிப்ப என்று அநாகரிகமாக என் கணவரான அ.சா.1 யை அசிங்கமாக பேசி வளர்மதி தன் கையில் வைத்திருந்த அரிவாளால் அ.சா.1 ன் தலையில் வெட்டினார். எதிரி எழிலரசன் கம்பை வைத்து அ.சா.1 யை அடித்து கீழே தள்ளிவிட்டார்.

3) என் கணவர் ரத்த வெள்ளத்தில் இருப்பதைப் பார்த்து ஓடிவந்தேன். முகம் எல்லாம் ரத்தம் வடிந்தது. அப்போது எழிலரசன் என்னை கீழே தள்ளிவிட்ட பின் இருவரும் எங்களைப் பார்த்து உங்கள் இருவரையும் கொன்றால் தான் இந்த இடத்தில் குடியிருக்க முடியும் என அரிவாளைக் காட்டி மிரட்டினார்கள். அதன் பிறகு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 யை நான் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தேன். அ.சா.1 யை தாக்கிய நபர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

4) அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது சிவகங்கை நகர் போலீசார் அங்கு வந்து அ.சா.1 யை விசாரித்தபோது அ.சா.1 புகார் மனு கொடுத்தார். மேற்படி சம்பவத்தில் எதிரிகளால் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாக சுமார் 21 - 23 நாள்கள் சிகிச்சையில் இருந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பு அளித்தும் இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

P SELVAM

Digitally signed by P SELVAM
Date: 2025.07.21 17:22:01 +0530